**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணியகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பணியகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பணியகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக பணியகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பணியகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 36 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பணியகத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப் பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு தூதரகங்களில் காணப்படுகின்ற கிரயம் ரூபா 447,392,585 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு தூதரகங்களுக்கு சொந்தமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீ செய்து பூர்த்தி செய்வதற்கு அந்த நடவடிக்கைகள் புதிய அனுபவமாக உரிய நாடுகளில் சேவை வழங்குப வர்களிடமிருந்து மேற்கொள்வதற்கு முயற்சித்த | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போதும் அது தோல்வியடைந்திருந்ததுடன் அதற்காக மீண்டும் பெறுகை செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு வேண்டியிருந்தமையால் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 15 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வருமானவரி கணிப்பிடும் போது வரிகளுக்காக தற்காலிக மாற்ற மொன்று உருவாகாத (நிரந்தர மாற்றம்) 25 வாகனங்களின் பயன்படுத்தும் உரித்து சொத்தாக இனங்கண்டு அதற்குரிய சொத்துக்களின் நியாயமான பெறுமதி மற்றும் குத்தகை பொறுப்புக்களுக்கிடையிலான வேறு பாடுகள் பிற்போட்ட வரிப் பொறுப்பாக ரூபா 106,761,454 கணிப்பிடல் மற்றும் 2016/2017 காலப் பகுதிக்குரியதாக கைப்பெற்றப்பட்ட கற்பனைச் சொத்துக் களுக்காக நடப்பாண்டின் போது பிற்போட்ட வரிப்பொறுப்பாக ரூபா 4,115,886 கணிப்பிட்டதன் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 110,877,340 இனால் பிற்போட்ட வரிப்பொறுப்புக்கள் மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் சரியானதாகும். எதிர்காலத்தில் சரியாக சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 80(பீ) பிரிவின் பிரகாரம் 2022/23 மதிப்பீட்டு ஆண்டிற்குரிய ரூபா 286,520,680 ஆன வரி மிகை ஒதுக்கீடுகள் நடப்பாண்டில் வரி செலவினத்தில் குறைக்க வேண்டியிருந்த போதிலும் நடப்பாண்டின் வரி செலுத்துதல்களில் அப்பெறுமதி சேர்க்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் வரிச் செலவினம் அப்பெறுமானத்தால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நடப்பாண்டின் வருமான வரி மிகை மதிப்பீடொன்று காணப்பட்ட போதிலும் அதன் மூலம் ஒட்டுமொத்தமாக எடுக்கும் போது வரிகளுக்கான தாக்கம் ஏற்படவில்லை. இவ்வாறான வகையின் சீராக்கங்கள் எதிர் காலத்தில் சரிசெய்யப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரிக் கணிப்பீடுகள் சரியாகக் காண்பித்தல் வேண்டும். |
| (ஈ) | மேற்கூறப்பட்ட நியமத்தின் 88 ஆம் பிரிவின் பிரகாரம் வரி அதிகாரிகளுடன் காணப்படுகின்ற இணக்கமின்மையான பிரச்சினைகள் (unresolved dispute) தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் பிரகாரம் நிதிக் | எதிர்காலத்தில் சரி செய்யப் படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வரி கணிப்பிடுவதற்குரிய தகவல்களை |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 20 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியல்லா விடய மொன்றின் வரிக்கு முன் இலாபத்தில் சீராக்க வேண்டியிருந்த போதிலும் பணியகத்தால் மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்த முன்னைய ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 1,388,788,991 வரிக்கு முன் இலாபத்தில் சீராக்கப்படாமை மற்றும் ஆண்டின் வருமான வரிக்கான உள்ளபடியான செலவினம் ரூபா 226,778,807 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 1,615,567,798 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்தில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 132,814,814 சீராக்கம் காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன் இலாபத்தில் சேர்க்கப்பட்டதன் காரணமாக அப்பெறுமானத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக்காட் டப்பட்ட பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றின் வேறுபாடு ரூபா 97,788,637 ஆக சரிசெய்ய வேண்டி உள்ளது. காசுப் பாய்ச்சல் கூற்றின் பெறுமதி வரி செலுத்தும் கணக்கின் மீளாய் வாண்டிற்குரிய வரி ஒதுக்கீடுகள் அகற்றப்பட்ட பின்னர் சேமிப்பு மீதி ரூபா 1,732,042,234 லே குறிப்பிடப்பட்டிருந்தது. எதிர் காலத்தில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படும் மூலதன சீராக்கத்தின் கீழ் ரூபா 1,670,958,783 ஆன ஏனைய பெற வேண்டிய வைகளின் அதிகரித்தமை காசு வெளிப் பாய்ச்சலாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் பணியகத்தால் காசு உட்பாய்ச்ச லாக ரூபா 292,206,413 இனங்காணப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 1,963,165,196 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப் பட்ட பிரகாரம் காசுப்யாச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன சீராக்கத்தின் கீழ் ரூபா 1,670,958,783 காசு வெளிப்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்ட போதிலும் அது ரூபா 292,206,413 காசு உட்பாய்ச்சலாக சரிசெய்யப்படல் வேண்டும். அதன் காரணமாக மேற்குறிப்பிட்படப்ட பெறுமதியில் ரூபா 26 மில்லியன் ஹோமாகம காணிக்குரிய சீராக்கம் ஏற்பட் டிருந்ததுடன் அது பணியகத்தின் காசு உட்பாய்ச்சல் இல்லை. ரூபா 1,937,544,813 பெற வேண்டிய | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஆண்டின் போது காசாக மேற்கொள்ளப்பட்ட காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப் பாய்ச்சல் குறித்துரைத்தவாறு இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வட்டி வருமானத்தை சீராக்குவதற்கும், தேறாத வெளி நாட்டு நாணயமாற்று இலாபம் ரூபா 379,617 பெறுமதியை சீராக்குவதன் மூலம் ரூபா 292,206,413 பெறுமதி வெளிப் படுத்தப்பட்டுள்ளது. | |
| (எ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன சீராக்கத்தின் கீழ் நானாவித கடன்கொடுத் தோரில் ரூபா 1,184,188,776 குறைவடைந் தமை ரூபா 1,860,049,996 ஆக சீராக்கப் பட்டதன் காரணமாக மற்றும் பிற்போட்ட வரி சீராக்கம் ரூபா 4,010,206 காசு உட்பாய்ச்ச லாக இனங்காணப்பட்டதன் காரணமாகவும் செயற்பாட்டு நடவடிகைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 679,871,426 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | தொழிற்படு மூலதன சீராக்கத்தின் கீழ் நானாவித கடன்கொடுத்தோரின் ரூபா 1,844,776 குறைவடைந்தமை நிதிக்கூற்றில் ரூபா 1,860,049,996 காசு வெளிப்பாய்ச்சலாக இனங் காண்பதற்கு காரணமான நானாவித கடன்கொடுத்தோரில் தேறாத அந்நியச் செலாவன மாற்றல் பாதகம் ரூபா 675,861,220 கணக்கீடு செய்யப் பட்டிருந்தமையால் ஆகும். தொழிற்படு மூலதன சீராக்கத்தின் கீழ் பிற்போட்ட வரிச் சீராக்கம் ரூபா 4,010,206 காசுவெளிப்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டமை வரிக்குமுன் இலாபத்தில் அது காசு உட்பாய்ச்சலாக குறிப்பிட்டப் பட்டமையால் ஆகும். எதிர் காலத்தில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் போது காசாக மேற் கொள்ளப்பட்ட காசு உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் குறித்துரைத்தவாறு இனங்கண்டு காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பணியகத்திற்குச் சொந்தமான தம்புள்ளை காணி மற்றும் 50 வருட வாடகை அடிப்படை யில் பெறப்பட்டிருந்த ஹோமாகம காணி என்பன மீள் மதிப்பீடு செய்யப்படாதிருக்கும் போது அந்தக் காணிகளில் கிரயமான ரூபா 68,000,000 மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 18,029,749 மீள் மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் முறையே வரவு மற்றும் செலவு | ஹோமாகம காணியின் ஒரு பகுதி இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுப்பதுடன் அதற்கு பதிலாக வேறுறொரு காணியை பணியகத்திற்கு பெற்று வழற்குறதக்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற மையால் மீள் மதிப்பீடு மேற் கொள்ளப்படவில்லை. தம்புள்ள | பணியகத்திற்குச் சொந்தமான காணிகளின் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டதன் காரணமாக மீள் மதிப்பீட்டு ஒதுக்கக்கணக்கின் மீதி மற்றும் காணிகளின் பெறுமதி ரூபா 49,970,251 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | குடிவரவு நிலையத்திற்குரிய காணியின் உரித்துறுதி மற்றும் நில வரைபடத்தில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக இதற்காக மீள் மதிப்பீடு மேற் கொள்ளப்படாதிருந்ததுடன் சட்ட ஆலோசனையைப் பெற்று உரிய தீர்வினைப் பெற்றதன் பின்னர் மீள் மதிப்பீடு மேற் கொள்ளப்படும். | |
| (ஆ) | குவைத் இழப்பீட்டு நிதியத்தின் நிலையான வைப்புக்களுக்குரிய அந்நியச் செலாவணி மாற்றல் நட்டம் கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் ரூபா 513,141,327 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 511,622,072 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக குவைத் நிதியத்தின் இழப்பீட்டு மீதி மற்றும் குவைத் இழப்பீட்டு நிலையான வைப்புக்களின் மீதி ரூபா 1,519,255 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பணியகத்தால் குவைத் நிதியத்திற்குரிய கணிப்பீடு செய்யப்பட்ட அந்நியச் செலாவணி மாற்றல் நட்டம் ரூபா 526,054,566 பெறுமதி சரியானதாகும். | உரிய தினங்களில் காணப்படுகின்ற அந்நியச் செலாவணி மாற்றல் விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபம் அல்லது நட்டம் கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2014 நவம்பர் 24 ஆம் திகதி முதல் 2021 மார்ச் 09 வரையான காலப் பகுதிக்காக குவைத் தொழிலாளர் நலன்புரி பிரிவிற்குரிய செலுத்த வேண்டிய (குவைத் தினார் 41,130.373) ரூபா 43,310,283 நீர் பட்டியல் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக் கப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது உரிய பொறுப்புக்கள் தொடர்பாக குறித்துரைத்த பெறுமதியை இனங்காண முடியாதிருந்த மையால் கணக்கீடு செய்யப்படவில்லை. | பணியகத்தின் செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்க்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதி | 373,132,590 | மீதி உறுதிப்படுத்தும் ஆவணங்களின் அனுமதிப்பத்திர தாரர்களின் பதிவு இலக்கம் அல்லது நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப் படாமை. | எதிர்காலத்தில் மீதிகளை உறுதிப்ப டுத்தும் கடிதம் அனுப்பும் போது இது தொடர்பாக கவனம் செலுத்தி உரிய படிவத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனுமதிப் பத்திர தாரர்களை இனங்காணக் கூடிய வகையில் மீதி உறுப்படுத்தல் கடிதம் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இருந்து கிடைக்க வேண்டிய மீதி | 869,955,802 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை தொடர்பாக 2024.04.08 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாம் நடவடிக்கை எடுப்பதற்காக 2024.05.09 ஆந் திகதி பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் ஊடாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சிற்கு கடிதம் ஒன்று அனுப்பப் பட்டுள்ளது. | முறையான மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.**

**1.6.1 பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்ட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெற வேண்டிய நானாவித வைப்புக்களில் காணப்பட்ட ரூபா 1,000,000 மீதி முறையான அங்கீகாரம் இன்றி திரண்ட நிதியத்தில் வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்தது. | பணியகத்தின் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட பெற வேண்டிய மீதிகளைப் பரீட்சித்த போது ரூபா ஒரு மில்லியன் தொகை கிடைக் வேண்டிய மீதியாக இருந்த மையால் 2023 ஆம் ஆண்டில் கணக்குகளில் இந்த நட்டம் பதிவழிக்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரத்தின் பின்னர் திரண்ட நிதியத்தில் சீராக்கங்கள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

**1.6.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2008 முதல் 2018 வரையான காலப் பகுதிக் குரிய கூட்டுமொத்தமாக ரூபா 1,388,788,991 ஆன செலுத்த வேண்டிய மீதிகள் முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண் டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டடிருந்தது. | 2023 பெப்ரவரி 26 ஆம் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தின் பிரகாரம் 05 வருடங்களை விஞ்சிய சகல செலுத்த வேண்டிய மீதிகளும் வருமானத்திற்கு எடுப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் 2023 | செலுத்த வேண்டிய மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு முன் உரிய தரப்பினருக்கு அறிவிப் பதற்கு சகல வேலை களிலும் உற்சாக மெடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | ஆம் ஆண்டின் போது சீராக்கங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | தென்கொரியாவில் கடற்றொழில் பிரிவில் வேலையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் 2019 ஒக்டோர் 08 ஆந் திகதி விபத்திற்க உட்பட்டதன் காரணமாக அவரை இந்த நாட்டிற்கு கொண்டுவருவதற்காக சகோதரரால் ரூபா 1,564,546 பணியகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருக்கும் போது அவரை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவதற்கு மற்றும் வைத்தியசாலை பட்டியல்களைத் தீர்ப்பதற்காக தொழில் நலன்புரி பிரிவின் உத்தியோகத்தர்களினால் அவரின் அந்த நாட்டு வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் தொழிலாளர் நலன்புரிப் பிரிவில் உத்தியோகத்தரின் கடன் அட்டை பயன்படுத்தி விமான பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு செலவிடப்பட்ட செலவினங்கள் தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளாமல் சகோதரரால் வைப்புச்செய்யப்பட்டிருந்த தொகையில் எஞ்சியிருந்த ரூபா 98,786 மாதிரம் 2023 ஆகஸ்ட் மாதத்தின் போது அவருக்கு செலுத்தப்பட்டது. | கோரிய தூதுவர் அலுவல கத்தின் மூலம் அனுப்பப் பட்ட கணக்கு பதிவேடுக ளுக்கு இணங்க ஊழியர் களுக்காக அவரின் உறவினர்களால் பணியகத்தில் வைப்புச் செய்யப்பட்ட தொகையை மீண்டும் அவருக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 98,786 ஆக உறுதிப்படுத்திய பின்னர் இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஊழியரின் அந்த நாட்டின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட பணத்தை பயன்படுத்தி இருந்ததா எனவும் மற்றும் தொழிலாளர் நலன்புரி பிரிவின் உத்தியோகத்தரின் தனிப்பட்ட கடன் அட்டை பயன்படுத்தி விமானப் பயணச் சீட்டிக்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக விசாரணை ஒன்றின் மூலம் உறுதிப்படுத்து தல் வேண்டும். |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1985 இன் 21 ஆம் இலக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டம் | | | |
| i. | 24(1) ஆம் பிரிவு | பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரதாரர்கள் அல்லாத நபர்களால் ஊழியர்கள் வெளிநாடு செல்வதாகக் கூறி பணம் சேகரித்து கட்டார் அரசாங்கத்திற்கு ஊழியர்களை | 2009 இன் 56 மற்றும் 1994 இன் 04 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் திருத் தப்பட்ட 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்திற்கு இணங்க முறைப்பாடுகள் தொடர்பாக | சட்டத்தின் ஏற்பாடு களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஊழியத்திற்காக வெளி நாட்டிற்கு அனுப்புதல் தொடர்பாக 11 முறைப் பாடுகளுக்கு அண்ணளவான அளவில் விசேட விசாரணைப் பிரிவிற்கு கிடைத்திருந்த போதிலும் அந்த நபர்கள் தொடர்பாக சட்டத்தின் 62 மற்றும் 63 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| ii. | 28(1) (அ) பிரிவு | பதிவுசெய்த அனுமதிப்பத்திரதாரர்கள் நான்கு பேர்களால் போலியான வெளிநாட்டு தொழில் கட்டளை தயாரித்து கட்டார் அரசாங்கத்திற்கு ஊழியர்களை வெளிநாட்டு அனுப்புவதற்கு அந்த உரிமை யாளரால் முறைப்பாடு செய் யப்பட்டிருந்தமை 2023 ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் 2023 நவம்பர் 20 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் முறைப்பாடுகள் கிடைத்திருந் தமையும் அவ்வாறு வெளிநாடு சென்ற ஊழியர் ஒருவர் 2024 மே 16 ஆந் திகதி மரணமடைந்திருந்த மையும் அந்த பொறுப்புக்களை எவரும் கையேற்காதிருந்தமையும் தூதுவரினால் பணியகத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டி ருந்தது. மேலும் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு விரைவான நடவடிக்கை எடுத்து தூதுவர் அலுவலகத்திற்கு அறிவிக்கு மாறு 07 கடிதங்கள் அனுப்பப் பட்ட | முகவர் நிறுவனத்திற்கு எதிரான விசாரணை நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் காணப்படு கின்றமையால் அந்த நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் கட்டார் தூதுவர் அலுவ லகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | பணியக சட்டத்திற்கு இணங்க அனுமதிப்பத்திர தாரர்களினால் வியாபார நடவடிக்கைகளை பேணிச் செல்ல வேண்டியிருந்தமையை அறிவுறுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதும் அது தொடர் பான விசாரணைகள் மேற் கொண்டு 2024 ஒக்டோபர் 29 ஆந் திகதி வரை அறிக்கை யொன்று அனுப்பப்பட்டிருக்க வில்லை. | | |
| iii. | 44 ஆம் பிரிவு | பதிவு செய்த அனுமதிப் பத்திதாரர்களால் பணியகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேலைவாய்ப்பு கட்டளைக்காக ஊழியர்களிடமிருந்து பணம் அறிவிடாமல் வெளி நாட்டிற்கு அனுப்புவதற்காக பணியகத்தால் வழங்கப்பட்ட அங்கீகாரம் முறைகேடாக பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டு முதல் அனுமதிப் பத்திரதாரர்கள் அல்லாத நபர்களால் ஊழியர்கள் வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு பணம் அறவிட்டு பதிவு செய்த அனுமதிபத்திரதாரர்கள் வேலைவாய்ப்ப கட்டளை மூலம் ஊழியர்கள் பணியகத்தில் பதிவு செய்வதற்காக போலியான தகவல்களை உள்ளடக்கி வெளிநாட்டிற்கு அனுப்பியிருந்தனர். அதில் வேலை வாய்ப்பின்றி 50 பேருக்கு அண்ணளவான எண்ணிக்கை யினர் மீண்டும் இலங்கைக்கு வருகை தந்து பணியகத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வினால் மேற் ொகள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. எனினும் பணியகத்தால் உரிய அனுமதிப்பத்திர | அனுமதிப்பத்திரதாரர்களால் மேற்கொள்ளப்பட்ட பணியகத்தில் பதிவு செய்தல் தொடர்பான விசாரணை பிரிவிற்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக பணிய சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்காமல் இருந்தமை பிழையானதாகும். பணியக சட்டத்தின் 44 ஆம் பிரிவிற்கு உரிய தாபன நடுவர் தீர்ப்பு செயற்பாடுகள் மாத்திரம் நடாத்தப்பட்ட போதிலும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள முறைமையில் பணியக சட்டத்தின் 44(4)1 இன் பிரகாரம் முறைப்பாட்டாளர் தொடர்பாக பணம் செலுத்துமாறு அனுமதிப்பத்திரதாரர் களுக்கு கட்டளையிடப் படாதிருந்ததுடன் மேற் கொள்ளப்பட்ட ஒழுக் காற்று நடவடிக்கைகள் வழக்கு கோவைகளில் காண்பிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடு களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பாதிப்பிற்கு உட்பட்ட தரப்பினருக்கு நியாயமான தீர்வு வழங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாரர்களுக்கும் பணம் அறவிட்ட நபர்களுக்கும் எதிராக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பாதிப்பிற்கு உட்பட்ட தரப்பினருக்கு நியாயமான தீர்வுவொன்று வழங்கப்பட் டிருக்கவில்லை. | | |
| iv. | 48(2) ஆம் பிரிவு | பணியகத்தில் வெளிநாட்டு நலன்புரி நிதியக்குழு அங்கீகாரமின்றி ஓமான் தூதரகத்தில் தொழிலாளர் நலன்புரி பிரிவின் ஆலோச னையாளரினால் வீட்டுப் பணிப்பெண்களின் வைத்தியசாலை பட்டியலைத் தீர்ப்பதற்காக 2023 ஒக்டோபர் 22 ஆந் திகதி ரூபா 2,549,640 செலுத்தப்பட்டிருந்தது. | வீட்டுப் பணிப்பெண்களின் வைத்தியசாலைக் கட்டணமாக ஓமான் றியால் 3,000 தொகை செலுத்துவதற்காக பணியகத்தின் தலைவரிட மிருந்து WhatsApp அறிவித்தல் ஊடாக அங்கீகாரம் பெறப்பட்டி ருந்ததுடன் அதன் கீழ் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2024.06.27 ஆந் திகதி நடை பெற்ற வெளிநாட்டு நலன் புரி நிதியக் குழுக் கூட்டத்தின் போது அதற்காக குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டுள் ளது. | சட்டத்தின் ஏற்பாடு களின் பிரகாரம் முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் செலவினங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| v. | 53(3) ஆம் பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமெரிக்க டொலர் 100 பணியகத்திற்கு வைப்புச் செய்த பின்னர் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் நாட்டிற்கு வேலை உடன்படிக்கை இன்றி சுற்றுலா வீசாவின் அடிப்படையில் வீட்டு பணிப் பெண்கள் வெளிநாடு செல்வதற்கு 2023 மார்ச் 20 ஆந் திகதிய தலைவரின் சுற்றறிக்கை இலக்கம் 07/2023 மூலம் பணியகத்தில் பதிவு செய்து அனுமதிப்பத்திர | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | சட்டத்திற்கு இணங்க அனுமதிப்பத்திர தாரர்களினால் தொழில் முயற்சி நடவடிக்கைகளை பேணிச் செல்ல வேண்டியமை அறிவுறுத்தப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாரர்களின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அத் திகதியில் இருந்து 2024 யூன் 06 ஆம் திகதி வரையில் இரண்டு நாடுக ளுக்கும் சுற்றுலா வீசாவின் அடிப்படையில் 4,942 வீட்டுப் பணிப் பெண்கள் வெளிநாடு சென்றிருந்த துடன் அதில் 3,954 பேருக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் 30 நாட்கள் கழிவதற்கு முன் வேலை வாய்ப்பு வழங்கப்பட்ட மைக்குரிய ஆவணங்கள் தூதரகத்தில் தகவல்கள் கணனி முறைமையில் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4.3 மற்றும் 7.1 ஆம் பிரிவுகள் | 2019 முதல் 2023 மார்ச் 10 ஆந் திகதி வரை தொழிலாளர் எழுதுவினைஞராக குவைத் தொழிலாளர் நலன் பிரிவில் சேவையாற்றிய உத்தியோகத்தருக்கு 2023 மார்ச் 09 ஆந் திகதி சேவை முடிவுறுத்தப்பட்டு மீண்டும் மார்ச் 15 ஆந் திகதி சேவைக்கு அறிக்கையிட்டிருந்தார். அவருக்கு தூதரகத்தில் சேவைக்காக வழங்கப்பட்டிருந்த அலுவலக விமானப் பயணச் சீட்டு மற்றும் அந்த நாட்டின் தூதரகத்தின் மூலம் விநியோகிக் கப்பட்டிருந்த அடையாள அட்டை என்பன மீளக் கையளிக்காமலும் மற்றும் முறையான அங்கீகார மின்றியும் அத் திகதியில் இருந்து மீண்டும் சேவைக்கு அறிக்கையி டப்படாதிருந்ததுடன் மார்ச் | அவரினால் பணியகத்தின் சேவையிலிருந்து கேட்டு விலகுவதற்கு கோரப்பட்ட போதும் பணியகத்தால் அது ஏற்றுக்கொள்ளப்படா திருந்த போதும் அவர் சேவைக்கு அறிக்கையிடா மையின் காரணமாக தாபன விதிக்கோவையின் 5 ஆவது அத்தியாயத்தின் 7:1 உப பிரிவின் பிரகாரம் 2023.03.29 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் அவர் சுயவிருப்பத்தின் அடிப்படையில் சேவையை விட்டுச் சென்றதாகக் கருதி பணியகம் நடவடிக்கை எடுத்திருந்தது. அவர் தொடர்பாக எடுக்கப்படு கின்ற ஒழுக்காற்று நடவடிக்கை ஆகும். 1983 இன் 12 ஆம் இலக்க பணிக் கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் பணிக் கொடை உரித்தற்றுப் போகாதிருந்தமையால் பணிக்கொடைத் தொகை குறித்துரைத்த ரீதியில் | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 29 ஆந் திகதி வெளிநாடு சென்றிருந்தார். அது தொடர்பாக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த துடன் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பணிக் கொடையாக ரூபா 514,055 தொகை 2023 ஏப்ரல் 06 ஆம் திகதி கொடுப்பனவு செய்யப்பட் டிருந்தது. வெளிநாடு சென்று 05 மாதங்களுக்குப் பின்னர் அதாவது 2023 செப்டெம்பர் 21 ஆம் திகதி முதல் சுய விருப்பத்தின் அடிப்படையில் சேவையை விட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை எடுப்பதற்கு பொது முகாமையாளரால் கடிதம் ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்த மையும் பணிக்கொடைப் பணம் செலுத்துதலும் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது. | செலுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 135 மற்றும் 138 | 2022 சனவரி முதல் யூலை வயையான காலப் பகுதியில் ரூபா 4,176,085 பெறுமதியான 21 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக அங்கீகரித்தல், பரிந்துரை செய்தல் மற்றும் உறுதிப்படுத்தல் போன்ற பணிகள் ஓமான் தூதரகத்தில் தொழிலாளர் நலன்புரி பிரிவில் மூன்றாவது செயலாளரால் மேற்கொள்ளப்பட் டிருந்தது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை யின் அடிப்படையில் தூதரகத்தில் சேவையாற் றிய பணியக உத்தியோகத் தர்களில் அநேகமானோர் இந்த நாட்டிற்கு வரவழைக் கப்பட்டதுடன் சேவையாற்று தல் வரையறுத்த ஊழியர் கள் எண்ணிக்கையாக இருந்தமையால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக் களைத் தயாரித்தல், பரீட்சித்தல், பரிந்துரை செய்தல், அங்கீகாரித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | என்ற 05 பிரிவுகளையும் மேவுகை செய்வதற்காக உத்தியோகத்தர்கள் காணப்படாமையின் காரணமாக ஒரு உத்தியோகத்தர் அல்லது தலைவர் இந்தக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளைக் கையொப்ப மிடும் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டதன் மூலம் நிதிக் கட்டுப்பாட்டு முறைமை மேற் கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2023 ஏப்ரல் 06 ஆம் திகதிய இலக்கம் 01/2023 என்ற தலைவரின் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 2023 ஆம் ஆண்டின் போது தூதரகத்தின் சேவைக்காக முன்னர் தூதரகத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த பணிய கத்தின் 07 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதில் இரண்டு பேர் 3 ஆவது மற்றும் 4 ஆவது தடவையாக தூதரகத் தில் சேவையில் பூர்த்தி செய்து வருகை தந்த உத்தியோகததர் கள் ஆகும். மேலும் தூதரக சேவை பூர்த்தி செய்து 03 வருடங்கள் பணியகத்தின் சேவையில் பூர்த்தி செய்யாதி ருந்த உத்தியோகத்தரும் சேர்க்கப்பட்டிருந்தார். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க ஆட்சேர்த்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தொகுதியினதும் பணியகத்தினதும் நிதி விளைவுகள் முறையே ரூபா 5,079,664,980 மற்றும் ரூபா 4,927,579,629 வரிக்குப் பின் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் முறையே ரூபா 6,123,303,917 மற்றும் ரூபா 6,085,612,304 வரிக்குப் பின் இலாபமாக காணப்பட்டது. அதன் பிரகாரம் தொகுதியினதும் பணியகத்தினதும் நிதி விளைவுகளில் முறையே ரூபா 1,043,638,937 இனாலும், ரூபா 1,158,032,675 இனாலும் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம்

குறைவடைந்தமை, விளம்பர செலவினம் மற்றும் நலன்புரிச் செலவினங்கள் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 யூலை 25 ஆம் திகதி தென்கொரியாவை நோக்கிச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 06 ஊழியர்களினால் அத்திகதியில் குறித்த விமானத்தின் பயணச் சீட்டொன்று ரூபா 272,000 மற்றும் 05 விமானச் சீட்டுக்கள் ரூபா 279,000 தொகையிலும் நேரடியாக ஸ்ரீ லங்கன் விமான கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் வெளி நாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியிலி ருந்து அந்த விமானப் பயணச் சீட்டு ரூபா 319,522 விலையில் கொள்வனவு செய்யப்படா மையின் காரணமாக அவர்களுக்கு அத் திகதியில் கொரியாவை நோக்கி அனுப்புதல் கைவிடப்பட்டிருந்தது. அதில் ஒரு ஊழியர் மாத்திரம் மீண்டும் ரூபா 319,522 செலுத்திய பின்னர் அந்த விமானத்தில் செல்வதற்கும் ஏனைய 05 ஊழியர்களும் அதன் ஒரு மாதத்திற்குப் பின்னர் ரூபா 329,291 வீதம் செலுத்தி மீண்டும் ஒரு தடவை விமானப் பயணச் சீட்டுப் பெற்று அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணியகத்தின் உயர் முகாதைத்துவத் தால் இந்த 06 ஊழியர்களுக்காகவும் விமானப் பயணச் சீட்டுக்காக ரூபா 1,961,225 மேலதிகமாக செலவிட வேண்டி எற்பட்டிருந் தது. | 2023.07.25 ஆம் திகதி நாட்டில் இருந்து செல்வதற்கு தீர்மானிக்கப் பட்ட 806 ஆவது குழுவிற்காக உரிய அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 2023.07.17 ஆந் திகதி நடாத்தப்பட்ட துடன் அதன் போது குழுவொன்றாக விமானப் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளல் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனியிலிருந்து மேற்கொள்ள வேண்டியிருந் தமை அறிவுறுத்தப்பட்டிருந் தது. வேலைவாய்ப்பு பெற்றுச்செல்லும் ஒருவர் குறித்த திகதியில் வெளி நாடு செல்லாதிருந்தமை யால் ஏனைய 06 வேலை வாய்ப்பு பெற்றுச் செல்பவர்களுக்காக பணிய கத்தால் வழங்கப்பட்டிருந்த ஆலோசனைகளுக்கு முரணாக விமானப் பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. | ஸ்ரீ லங்கன் விமான சேவைக் கம்பனியி லிருந்து விமானப் பயணச்சீட்டுக்கள் நேரடியாக கொள்வனவு செய்வதற்காக கம்பனிக்கு இயலுமை காணப்படும் போது தனியார் முகவர் நிறவனம் ஊடாக கொள்வனவு செய்தல் தொடர்பான பரிசோதனைகள் மேற் கொண்டு மேலதிகமாக அறவிடப்பட்ட பணத்தை ஊழியர்களுக்கு மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | குவைத் தூதரகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு இல்லம் 2021 மார்ச் 09 ஆம் திகதி முதல் இந்தக் கட்டிடத்திலிருந்து அகற்றப் பட்டு வீட்டு அடிப்படையாகக் கொண்ட உத்தியோகத்தரின் வீடொன்றாக பயன்படுத்தியதன் காரணமாக துதரக சேவையில் எதிர்பார்ப்புடன் வருகை தருகின்ற வீட்டுப் பணிப் பெண்களுக்கு இரவு நேரத்திலும், வார இறுதியிலும் உரிய பிரச்சினைகளை தீர்த்து வைக்கும்வரை தங்கியிருப்பதற்கு பொருத்த மான | பாதுகாப்பு இல்லத்தையும் மூடி விடுவதற்கு தீர்மானித்து முன்னாள் தலைவரின் விருப்பத்தின் பிரகாரம் ஆக இருந்ததுடன் ஏனைய நடவடிக்கைகள் அதாவது தொழிலாளர் மற்றும் நலன்புரி பிரிவின் நடவடிக்கைகளைப் போன்று வெளிநாட்டில் இருந்து வரும் உத்தியோகத்தர்கள் தங்குவதற்கான வசதிகளும் பேணிச் செல்ல | பாதிப்பிற்கு உட்பட்ட வருகை தருகின்ற வீட்டுப் பணிப் பெண்களுக்கு உரிய பிரச்சினைகளை தீர்க்கும் வரை தங்கி யிருப்பதற்கு பொருத்தமான இட மொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடமொன்றாகக் காணப்படவில்லை. மேலும் 2023ஆம் ஆண்டிற்காக உத்தியோ கத்தர் இருவரின் உத்தியோகபூர்வ இல்லங் களுக்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட வாடகைக் கட்டணத்தை விஞ்சி ரூபா 21,330,047 மேலதிகமாக செலுத் தப்பட்டிருந்தது. | வேண்டியிருந்தது. அதனால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த பாது காப்பு இல்லத்தை பொருத்தமான பிரகாரம் தயாரித்து மூன்றாம் செயலாளரின் உத்தியோக பூர்வ இல்லமாக பயன்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்காக வெளியிலிருந்து உத்தியோகபூர்வ இல்லம் வாடகைக்கு பெறப்படுமா யின் அதற்காக வருடாந்தம் அதிக தொகை செலவிட வேண்டி ஏற்படும். (KD 4,032=KD 336x12 அளவு) இதன் பிரகாரம் இந்த பழுதுபார்த்தல்களை மேற்கொண்டு பயன்படுத்துவதன் மூலம் செலவினங்கள் குறைக் கப்பட்டதுடன் உத்தியோகத்தர் தூதரகத்தில் தங்கியிருக்கின்ற காரணத்தினால் சேவையை வழங்குவதற்கும் இலகுவாக உள்ளது. | |
| (இ) | பணியகத்திற்குரிய ஓமான் தூதரகம் அமைந்துள்ள கட்டிடத்தில் பாதுகாப்பு வீடொன்றை பேணிச்செல்வதற்கான இயலுமை காணப்படும் போது 2019 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் 2024 யூலை வரை வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்பட்டதுடன் 2024 சனவரி வரை அண்ணளவாக (ஓமான் றியால் 34,000) ரூபா 28,561,112 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் முதல் திசம்பர் வரையான காலப் பகுதியில் தங்கியிருந்த கைதிகளினால் பாதுகாப்பு வீட்டிற்கு மேற்கொள்ளப்பட்ட நட்ட இழப்பை பழுதுபார்த்து உரிமையாளருக்கு கையளிப்பதில் தாமதமான 2023 பெப்ரவரி முதல் ஆகஸ்ட் வரையான 07 மாத காலப் பகுதிக்காக வாடகைக் கட்டணம், நீர்ப் பட்டியல், மின்சாரப் பட்டியல் மற்றும் இழப்பு நட்டத்திற்காக ரூபா 19,130,480 செலுத்தப்பட்டிருந்தது. | குடியகல்வாளர்களினால் மேற் கொள்ளப்பட்ட கலவர நிலைமையின் அடிப்படையில் ஏற்பட்ட நட்டம் மற்றும் மழை நீரினால் ஏற்பட்ட இழப்புக்களுக் காக கணிசமான தொகை யொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டது. கட்டிடத்தில் ஏற்பட்ட நட்ட இழப்புத் தொடர்பாக பரிசோதனை தூதுவர் அலுவலக உத்தியோ கத்தர் மற்றும் கட்டிட உரிமை யாளருடன் இணைந்து நடாத்த வேண்டியிருந்தமையால் பரிசோதனைகள் தாமதமடைந்து மேற்கொள்ளப்பட்டதுடன் கட்டிட உரிமையாளருக்காக தோற்றியி ருந்த தரப்பினரில் இடம்பெற்ற தாமதமும் காரணமாகும். மேலும் செலுத்துவதற்கு எற்பட்ட நட்டத்திற்காக கணிசமான தொகையொன் றைச் செலுத்துதல் அந்தக் கட்டிடத்தின் நவீன துணைப் பாகங்களை இட்டு கட்டியெழுப் | வெளிநாட்டில் பேணிச் செல்லப்படுகின்ற நலன்புரிச் சங்கம் முறையான பதவி யணியினருடன் பேணிச் செல்ல வேண்டியிருந்தடுன் இந்த சம்பவங்கள் தொடர்பாக முறையான பரிசோதனை நடாத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பப்பட்ட மின் பாரந்தூக்கியுடன் 03 மாடிகளை உடைய நவீன கட்டிடமாக இருந்தமையினால் ஆகும். | |
| (ஈ) | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பாதுகாப்பு வீடொன்றாக பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்காத கட்டிடம் ஒன்று 2023 ஆம் ஆண்டிற்காக வாடகை அடிப்படையில் பெறப்பட்டு உடன்படிக்கையின்றி ஓமான் றியால் 7,200 அதாவது ரூபா 6,872,544 செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் அது ஓமான் வெளி நாட்டலுவல்கள் அமைச்சிற்கு பதிவு செய்வதற்காக அனுப்பப் பட்டுள்ளது. அவ்வாறே வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய உடன் படிக்கை கைச்சாதிட்ட பின்னர் மேற்கொள்ள வேண்டிய பணிகளாக இருந்தமையால் உடன்படிக்கை கைச்சாத்திடு கின்ற சந்தர்ப்பம் வரையில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் தீர்மானத்தை அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்படவில்லை. அவ்வாறே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அங்கீகரம் கிடைக்கப்பெறாதி ருந்த போதிலும் கட்டிட உரிமையாளரின் இணக்கப்பாட் டின் அடிப்படையிலும் பாதுகாப்பு வீடொன்றாக பேணிச்செல்வதற் கான தேவையின் அடிப்படையி லும் பாதுகாப்பு வீடொன்றாக பேணிச்செல்லப்பட்டிருந்தது. | முறையான உடன் படிக்கை மேற்கொள் ளப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீட்டுத்துறையின் வேலைகளுக்காக முதன்மையாக வெளிநாடு செல்கின்ற வீட்டுப் பணிப்பெண்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 5,000 மற்றும் ரூபா 2,500 பெறுமதியான சதொச நன்கொடை உறுதிச்சீட்டுகள் முறையே ரூபா 14,000 மற்றும் ரூபா 28,000 1 சதவீத கழிவின் கீழ் ரூபா 138,600,000 தொகையில் 2023 ஒக்டோபர் 13 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2024 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலம் அதில் ரூபா 128,229,300 பெறுமதியான 13,005 உறுதிச் சீட்டுக்கள் எஞ்சியிருந்தது. முதலாவது | இந்த நிகழ்ச்சித் திட்டம் 2023 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படா திருந்ததுடன் புதிய செயற்பா டொன்றாக 2023 யூன் 19 ஆந் திகதி பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல் படுத்துதல் 2023.11.24 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு 52 உறுதிச்சீட்டுக்களும், 2024 | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக் கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை தாமதமின்றி அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தடவையில் வெளிநாடு செல்கின்ற பெண்கள் முதல் வெளிநாடு சென்றிருந்தமைக்கான ஆவணங்கள் சமர்ப்பித்து பயிற்சிகளிலிருந்து விடுவிக்கப்படு கின்றமை மற்றும் விழாக்கள் நடாத்துதலில் தாமதம் இதற்கான காரணமாக இருந்தது. | ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையில் 1670 உறுதிச் சீட்டுக்களும் பகிர்ந்தளிக்கப்பட்டி ருந்தது. | |
| (ஆ) | 2022 யூன் 07 ஆம் திகதிய பணியகத்தின் தலைவரின் கடிதம் மற்றும் 2023 சனவரி 09 ஆம் திகதிய பிரதி பொது முகாமையா ளரின் (பயிற்சி) கடிதத்திற்கு முரணாக முதலாவது தடவையில் வெளிநாடு செல்கின்ற வீட்டுப் பணிப்பெண்களுக்காக ரூபா 22,410 சேவைக் கட்டணம் அறவிட்டு 28 நாட்கள் (NVQ Level 3) வதிவிடப் பயிற்சி வழங்கப்படாமல் 2023 சனவரி முதல் 2024 மே 29 ஆம் திகதி வரையான காலத்தில் வீட்டுப் பணிப்பெண்கள் 28,165 பேர்கள் முதலாவது தடவையில் வெளி நாட்டிற்கு அனுப்பப்பட்டதன் காரணமாக ரூபா 631,177,650 பயிற்சி வருமானம் பணியகத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை | உள்ளகக் ஆலோசனைப் பத்தி ரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் சுற்றறிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக விசேட பரிசோதனை மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2022 ஒக்டோபர் 15 மற்றும் 16 என்ற இரு தினங்களில், காலி சமநல பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்காக வியாபார கொட்டகையொன்று ரூபா 170,000 வீதம் மற்றும் 2023 யூலை 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத் தில் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொட்டகை ஒன்று ரூபா 500,000 வீதம் முறையே 30 கொட்டகைகள் மற்றும் 25 கொட்டகைகள் பெறுகை நடைமுறை களைப் பின்பற்றாமல் தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொட்டகை ஒன்றின் விலை ரூபா 330,000 இனால் அதிகரித்தமை தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் 2023 மே 29 ஆம் திகதிய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு செயலாளரின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு 25 கொட்டகைகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 12,500,000 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய வியாபார கொட்டகைகளை வழங்குவதற்காக பெறுகை பணிகள் வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோ கத்தராக அமைச்சு செயலாள ருக்கு அனுப்பப்பட்ட 2023 மே 29 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டி ருந்தது. | பெறுகை நடைமுறை களைப் பின்பற்றாமை தொடர்பாக விசேட விசாரணை நடாத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2013 சனவரி 24 ஆம் திகதிய அமைச்ச ரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை சமுர்த்தி அதிகாரம சபையுடன் ஒன்றி ணைந்து வீரர்களுக்கு வீட்டுக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற் காக 05 வருடத்திற்கு புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திட்டு பணியகத்தால் 2013 மார்ச் 08 ஆம் திகதி ரூபா 100,000,000 தொகை சமுர்த்தி அதிகார சபையின் பேரில் நிலையான வைப்பொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந் தது. புரிதுணர்வு உடன்படிக்கைக் காலம் 2018 மார்ச் 07 ஆம் திகதி முடிவடைந்தி ருந்த போதும் அந்தப் பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்திலிருந்து இந்தத் தொகையை அறவிடுவதற்காக அமைச்சரவைப் பத்திரம் தயாரித்து அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | புரிந்துணர்வு உடன் படிக்கையின் பிரகாரம் இந்த பணம் செயற் திட்டத்திற்காக பயன் படுத்தப்பட்டிருந்ததா என உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் உரிய வைப்புப் பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 பெப்ரவரி 24 ஆம் திகதி இலக்கம் 01/2004 என்ற திறைசேரி சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற சுற்றறிக்கையின் செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தி யின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பணியகத்தால் 100 நாட்கள் தாமதமடைந்து 2023 யூன் 10 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் கணக்காய்விற்கு வழங்குவதற்கு பிரதான அலுவலகம், பயிற்சி நிலையம் மற்றும் மாகாண அலுவலகங் கள் மற்றும் விமான நிலையங் கள் பிரிவுகளில் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு மேற்கொண்டு பூர்த்தி செய்யப் படாதிருந்தமையால் வழங்க முடியாதிருந்ததுடன் அந்த எதிர்வரும் ஆண்டின் போது குறித்துரைத்த திகதியில் கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோ சனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |